SOSA-I-M

# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - நான்கு

நேரம்: 2 மணி

I. **அ) சரியான சொல்லைத் தேர்வு செய்து எழுதுக.** **5 × 1 = 5**

1. ஆசி இச்சொல்லின் பொருள் ________________

அ) புகழ்ந்து ஆ) மகிழ்ந்து இ) வாழ்த்து

2. மூதாதையர் - பொருள் கூறுக.

அ) சகோதரர் ஆ) உறவினர் இ) முன்னோர்

3. புரவி இச்சொல்லின் பொருள் ________________

அ) யானை ஆ) குதிரை இ) பூனை

4. ‘உற்சவம்’ என்ற சொல்லின் பொருள் ________________

அ) ஆச்சர்யம் ஆ) திருவிழா இ) முயற்சி

5. ‘அன்னைத்தமிழே’ பாடலின் ஆசிரியர் ________________

அ) நா. காமராசன் ஆ) பாரதியார் இ) ஔவையார்

**ஆ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** **4 × 1 = 4**

அ) குருத்தோலை இ) உலகப்பழமை

ஆ) ஒட்டியிருந்தன ஈ) பெரும்படை

**இ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** **4 × 1 = 4**

அ) பேசி + இருந்தால் இ) காகிதம் + கப்பல்

ஆ) மணி + பயறு ஈ) நிழல் + ஆகும்

**ஈ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** **4 × 1 = 4**

அ) இணைந்து இ) வெற்றி

ஆ) ஒற்றுமை ஈ) இளமை

**II. அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

1. கற்பகத் தரு என்றழைக்கப்படுவது ________________
2. விசயநகரை ________________ என்ற மாமன்னர் ஆண்டு வந்தார்.
3. கல்லணையைக் கட்டிய அரசன் ________________
4. இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை ________________
5. வெற்றி வேற்கை பாடலின் ஆசிரியர் ________________

**ஆ) பொருத்துக.** 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| அ) திணை | - | பெண்கள் |
| ஆ) தையலர் | - | திருமாவளவன் |
| இ) கரிகாலனின் இயற்பெயர் | - | நீர்நிலை |
| ஈ) கயம் | - | அஃறிணை, உயர்திணை |

**இ) சான்றோர் மொழி – வெற்றி வேற்கை பாடலை அடிமாறாமல் பிழையின்றி எழுதுக.** 5

**III. அ) பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஆறனுக்கு விடையளி.** 6 × 2 = 12

1. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
2. பனை மரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?
3. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. விசயவர்த்தனர் எப்படிப்பட்ட குருவி வேண்டும் என்று கூறினார்?
5. ஆநெய், பூநெய் ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?
6. முயலின் கவலைக்குக் காரணம் என்ன?
7. ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?
8. கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன?
9. மழையில் சிறுவர்கள் எதனை செய்து மிதக்கவிட்டார்கள்?

**ஆ) பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 5 = 5

1. உனக்குத் தெரிந்த பழமொழிகள் ஐந்து எழுதுக.
2. உடல்நிலை சரியில்லாததால் இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு விண்ணப்பம் வரைக.


IV. அ) **பின்வரும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளி.** 7 × 1 = 7

1. கந்தன் கீழே விழுந்து விட்டான் மேற்கொண்டு ஓட முடியவில்லை.
   (பொருத்தமான இணைப்புச் சொற்களை இணைத்து எழுதுக.)
2. உருவத்தில் பெரியது யானை.
   ________________ கூட்டம் கூட்டமாய் வாழும்.
   (பெயர்ச் சொல்லின் இறுதியில் 'கள்' சேர்த்துப் பன்மையாக்குக.)
3. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம். அது என்ன?
4. சடை, கலை - (சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல்லை உருவாக்குக.
5. Talk less work more - (ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ் பழமொழியை எழுதுக.)
6. ஆகா என்ன சுகம் தெரியுமா (பொருத்தமான நிறுத்தற்க்குறி இடுக.)
7. நீர்நிலைகளில் ஒன்று ________________, ஐந்துக்குப் பின் ______________
   (இரண்டு தொடருக்கும் பொதுவான பதில் எழுதுக.)

ஆ) **அகர வரிசையில் எழுதுக.** 3

திங்கள், தென்றல், தங்கம், தௌவை, தொட்டி, தைப்பொங்கல் தோரணம், துவாரம், தேசியக்கொடி, தீபாவளி, தூக்கணாங்குருவி, தானம்

இ) **ஓர் எழுத்தைக் கண்டுபிடித்து நான்கு சொல்லை எழுதுக.** 2 × 1 = 2

1. 


2. 